## பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

## அஹமதி தமிழ் திருச்சபை

# ..."நீதிமான்களோ சிங்கத்தைப்போல தைரியமானவர்கள்".

**நீதி :28:1**

செய்தி மலர்
2022
ஜூலை

இதழ் : 03
மலர் : 19



# சபை ஊழியரின் அன்பு மடல்



இறைமகனாம் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சபையின் குடும்பங்கள், சகோதர, சகோதரிகள், சிறுபிள்ளைகள், வாலிபர்கள் யாவரையும் வாழ்த்துகின்றேன். 2022 துவங்கி ஆறு மாதங்களை ஆசிகளோடு கழித்து, ஏழாவது மாதத்தில் பிரவேசிக்க செய்திருக்கின்ற தேவாதி தேவனுக்கு தாம் ஒவ்வொருவரும் இருதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி சொல்ல கடமைபட்டுள்ளோம்.

அநேக நாட்களுக்குப் பிறகு கடந்த நாட்களிலே அநேகர் தாய் தேசம் செல்லவும், சந்தோஷத்தின் நாட்களை கழித்து, மீண்டுமாக திரும்பிவர கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். அநேகர் ஆயத்தப் பட்டுக்கொண்டும் இருக்கின்றனர். அவர்களோடும் தேவ கரம் கூட இருந்து வழி நடத்த ஜெபித்துக்கொள்வோம்.கடந்த மாதம் நடந்த ஒவ்வொரு ஆராதனையிலும் தேவ பிரசன்னம் நம்மோடு இருந்து ஆசீர்வதித்தற்காகவும், முன்னின்று நடத்தின தேவ பிள்ளைகளோடும், அதற்கு ஒத்தாசையாக இருந்த ஒவ்வொருவரையும் கர்த்தர்தாமே கிருபையின் வரங்களினாலே, இன்னும் நிரப்பி, வழி நடத்த சபையோராய் ஜெபித்துக் கொள்ளவோம்.

ஜெயம் கொடுக்கின்ற இயேசு நம்மை நடத்தி வருகின்றார். அதற்கு எதிராய் சாத்தானும் நம்மை பயமுறுத்துகிறான். உலகத்தின் பாடுகள் நம்மை துரத்துகிறது, உலகத்திலே நமக்கு உபத்திரவம் உண்டு, அதிலும் நாம் மேன்மை பாராட்ட வேண்டும், உபத்திரவத்தை உடைத்தெறிகின்ற அனுபவம் வர வேண்டும். உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்கும். பரிசுத்தராகிய பவுல் அதைத்தான் நமக்கு அறிவுறுத்துகிறார்.

உபத்திரவத்தை மேற்கொள்ள நமக்கு "தைரியம்" வேண்டும், பெலன் வேண்டும், அது தேவ பெலனாக இருக்கட்டும்.

**"நீதிமான்களோ சிங்கத்தைப் போல தைரியமாயிருக்கிறார்கள்" நீதி 28:1.**

கர்த்தருக்கு ஊழியம் செய்து, தேவ நாமத்தை மகிமை படுத்த விரும்புகின்ற நமக்கு தைரியம் மிகவும் முக்கியம், தைரியமாக இருந்தால் தான், நாம் பிரச்சனைகளை மேற்கொள்ள முடியும். சாத்தான், பாவம் செய்ய தூண்டி , பாவத்தில் தள்ள பார்ப்பான். பாவம் தைரியத்தை இழக்க செய்யும், விசுவாச வாழ்க்கை குறையும், ஆவிக்குரிய பெலன் குறையும்.

"ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது" நீதி 24:10.

கிறிஸ்துவுக்குள் நமது பெலன் அதிகம், தைரியம் அதிகம், முதலாவது எல்லாவற்றிற்கும் ஸ்தோத்திரம் சொல்வோம்.
பவுலும், சீலாவும் சிறையில் இருந்துபோல, தேவனை துதித்து பாடினார்கள் (அப் 16:25) இது தான் "ஸ்தோத்திரத்தினால் கிடைக்கும் தைரியம்".

கர்த்தர் நமக்கு அநேக வசனங்களையும், வாக்குதத்த வார்த்தைகளையும் கொடுத்திருக்கிறார், அவைகளை உரிமையாக்கி கொண்டு ஜெபிக்கவேண்டும். வாக்கு செய்தவர், வாக்கு மாறாதவர் அவர் மனம் மாற மனுபுத்திரவனும் அல்ல, அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? அவருடைய வார்த்தைகள் " இருபுறமும் கருக்குள்ள பட்டயம்". பட்டயத்தை உடையவர்களுக்கு பயம் இருக்காது, மாறாக தைரியம் உள்ளவர்களாக கர்த்தரின் நாமத்தில் சுகித்திருப்பார்கள்.

அவர் சிந்தின ரத்தத்தினாலே, கழுவப்பட்டு, பரிசுத்த வாழ்வு வாழ நாமும் ஒப்பு பொடுக்க வேண்டும். இதுதான் அவர் சிந்தின இரத்தத்தாலே நமக்கு கிடைக்கும் தைரியம். "அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்கு தைரியம் உண்டாயிருக்கிற படியினாலும்" எல்லாவற்றிற்கும் மேலாய் நமக்கு " இயேசு கிறிஸ்துவினாலே மிக தைரியம்" கிடைக்கும். பவுல் சொன்னது போல (எபே 3:12).

"அவரைப் பற்றும் விசுவாசத்தினாலே அவருக்குள் நமக்கு தைரியமும் திட நம்பிக்கையும் தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டு".

அந்த விசுவாசத்தோடே வாழ்ந்து கர்த்தருக்குள் நிலைத்திருக்க, கர்த்தர் கிருபை செய்வாராக. ஆமென்.

இந்த மாதம் நடைபெறவிருக்கின்ற எல்லா ஆராதனைகள், ஜெபகூடுகைகள், உபவாச ஜெபம் அனைத்திற்க்காக ஜெபித்துக்கொள்வோம், பங்கு பெருவோம், தேவ ஆசீர்வாதம் பெற்று சுகித்திருக்க நம் ராஜாதி, ராஜா யூத ராஜசிங்கம் கிருபை செய்வார். ஆமென்.

சபை ஊழியன்,
சகோ. ஜெயசேகர்

# தேவ செய்தி

## சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.

யோவான் 8:32 சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.

நாம் சத்திய வார்த்தை அறிந்து கொள்ளும் போது நம்முடைய பாவ வாழ்க்கையிலிருந்து உலகத்திற்க்கு ஒத்த வாழ்க்கையிலிருந்து நாம் நிச்சயமாக விடுதலை பெற முடியும். ஆனால் நாம் சத்தியத்தை அறிவதற்க்கு முன்பாக சில காரியங்களை செய்ய வேண்டும். அதைதான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இங்கு சுட்டிக் காட்டுகிறார் "சத்தியத்தையும்" என்று.

அப்படியானால் சத்தியத்தை அறிவதற்கு முன்பாக நாம் அறிந்து கொள்ள வேண்டியது அந்த வசனத்திற்கு முந்திய வசனம்.

யோவான் 8:31 "இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்".

1.விசுவாசம்
2.யூதர்கள்
3.உபதேசத்தில் நிலைத்திருப்பது
4. சீஷர்கள்

### 1.விசுவாசம்:

நம் விசுவாசம் எப்படி பட்டதாக இருக்கிறது மத் 14:28,29, 30 "பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான்.

அதற்கு அவர்: வா என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக ஜலத்தின் மேல் நடந்தான்.

காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில்: ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான்."

1யோவான் 5:4 "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்." என்று வேதம் சொல்கிறது.

ஆனால் நம்மால் ஜெபிக்க முடியவில்லை, பிரச்சனை போராட்டம், பாடுகள், உபத்திரவம், துன்பங்கள் வரும்போது நாம் பேதுருவை போல சூழ்நிலையை பார்த்து சோர்ந்து விடுகிறோம், முன்நோக்கி செல்ல முடியவில்லை. நம் விசுவாசத்தின் அளவு அவ்வளவுதான்.

பொதுவாக ஒரு வசனத்தை எல்லாரும் சொல்வதை நாம் கேட்டிருப்போம்.

"மனுஷரால் கூடாதது தேவனால் கூடும் என்று" சில நேரங்களில் நாம் எல்லா வசனத்தையும் சேர்த்து குழப்ப கூடாது.

மாற்கு 10:27 "இயேசு அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாததுதான், தேவனால் இதுகூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும் என்றார்."

இந்த சம்பவத்தை பார்க்கும் போது மாற்கு 10:17-27 ஒரு ஐசுவரியவான் இயேசுவிடம் வந்து நல்ல போதகரே "நித்திய ஜீவனை" சுதந்தரித்துக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறான். இயேசு கிறிஸ்து இறுதியாக சொல்கிறார், உனக்கு உண்டானவைகளை விற்று தரித்திரருக்குக் கொடு என்ற மாற்கு 10:22 "அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாய் இருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான்."

அந்த ஐஸ்வரியவானை குறித்து சொல்லுவதற்கு தான் இயேசு கிறிஸ்து சொல்லுகிறார், இது மனுஷரால் கூடாததுதான் தேவனாலே எல்லாம் கூடும் என்று. அதாவது பரலோக ராஜ்ஜியத்திற்கு செல்வதற்காக சொல்லப்பட்டது.

நான் நன்றாக வேதம் வாசிக்கிறேன் என்றோ, நன்றாக ஜெபிக்கிறேன் என்றோ, எல்லோரிடம் அன்பாக இருக்கிறேன் என்றோ, ஊழியம் செய்கிறேன் என்றோ, நன்றாக ஆராதனை செய்கிறேன் என்றோ, நான் பரலோக ராஜ்ஜியம் சென்று விடுவேன் என்று உறுதியாக சொல்ல முடியாது.

"கர்த்தருடைய இரக்கம் நமக்கு இருந்தால் மட்டுமே நாம் பரலோக ராஜ்ஜியம் செல்ல முடியும்.

இதற்காக மாத்திரம் இயேசு இந்த வார்த்தையை சொன்னார், இது மனுஷரால் கூடாதது" என்று.

மாற்கு 9:23 "இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்."

விசுவாசிக்கிறவனுக்கு, நமக்கு எல்லாமே கூடும் எப்போது என்றால்?

ரோமர் 1:17 "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது"

இந்த வார்த்தையை விளங்கிக் கொள்வது சற்று கடினம். ஆனால் English Bible-ல் இந்த வார்த்தையை பார்க்கும் போது .

Rom 1:17 "From Faith To Faith as it is written"

**அதாவது நம் விசுவாசத்திலிருந்து தேவனுடைய விசுவாசத்திற்கு செல்ல வேண்டும்.**

**மாற்கு 9:23 "இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்." அதாவது இயேசு அந்த அசுத்த ஆவிபிடித்த தன் மகனை குணப்படுத்த முடியும் என்ற விசுவாசம் அந்த மகனின் தகப்பனிடத்தில் இருக்கிறதா என்ற கேட்டார்.**

CAN YOU BELIEVE ME – **என்று அந்த தகப்பன் விசுவாசிக்கிறேன் என்று சொன்ன உடனே இயேசு அந்த அசுத்த ஆவியை துரத்தினார் என்று பார்க்கிறோம்.**

**அதாவது நம் விசுவாசம் அல்ல பரிசுத்த தேவனின் விசுவாசம் நமக்குள் இருக்க வேண்டும்.**

**யோவான் 16:33 இயேசு சொல்கிறார் " நான் உலகத்தை ஜெயித்தேன்" என்று.**

**அந்த விசுவாசம் நமக்குள் இருந்தால் அந்த தேவனுடைய விசுவாசம் நமக்குள் இருந்ததால் நாமும் உலகத்தை ஜெய்க்க முடியும்.**

**1யோவான் 5:4 "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்"**

## 2.யூதர்கள்:

**யூதர்கள் என்றாலே கர்த்தரை துதிப்பவன் என்று அர்த்தம்.**

**சங் 149:8 "அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும்."**

**துதி என்றாலே கர்த்தரை உயர்த்துவது தான், அவரது அற்புதங்கள் வாக்குதத்தத்ங்கள், கர்த்தரின் மகிமை, கர்த்தரின் செயல்கள் கர்த்தருடைய வார்த்தை, இவைகளை நாம் உயர்த்தி சொல்வதுதான் துதி.**

**இந்த சங்கீதத்தில் வாசிக்கிறோம் " கர்த்தரை உயர்த்தும் துதி" என்று. அப்படி என்றால் என்ன?**

English Bible–**ல் இந்த வார்த்தையை பார்த்தால்**

Psalm 149:8 "Let the high praises of God, be in their mouth, and a two edged sound in their hand".

**கர்த்தரை உயர்த்தும் துதி என்று தமிழில் இருக்கிறது, அது உயர்த்தும் துதி, உயர்ந்த துதி.**

## உயர்ந்த துதி:

**நன்மை பெரும்போது, நம் ஜெபங்களுக்கு உடனே பதில் வரும்போது, நாம் எதிர்பார்த்த காரியங்கள் நடக்கும் போது தேவனை துதிப்பது அது சாதாரண துதி.**

**தீமையை அனுபவிக்கும் போதும் நம் ஜெபத்திற்கு பதில் வர தாமதிக்கும் போதும் மனிதர்கள் நம்மை புறக்கனிக்கும் போதும், நமக்கு காரியங்கள் ஒன்றும் வாய்காத போதும் கர்த்தரை துதிப்பதுதான் உயர்ந்த துதி.**

யோபு 2:10 "கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ என்றான்; இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை" அதுதான் உயர்ந்த துதி.

அப் 20:19 "வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரைச் சேவித்தேன்." என்று பவுல் சொல்லுகிறார்.

ஒரு வேளை நான் தாழ்மையாக இருக்கிறேன், ஆனாலும் நெருக்கப்படுறேன், புறக்கனிக்கப்படுகிறேன், எனக்கு எதிராக மனிதர்கள் எழும்புகிறார்கள், என் வளர்ச்சியில் பெறாமை கொள்கிறார்கள், என்று நாம் நினைக்கும் அந்த சூழ்நிலையிலும் நாம் தேவனை துதிக்கும் போது, தேவன் முடிவிலே ஒரு மகிமையான காரியத்தை நமக்கு தருவார். யோபுவுக்கு கொடுத்த தேவன் நமக்கும் தருவார்.

இரண்டாவதாக எந்த சூழ்நிலையிலும் நாம் துதிப்பவர்களாக இருக்க வேண்டும்.

## 3.உபதேசம்:

மத்தேயு 11:1 "இயேசு தம்முடைய பன்னிரண்டு சீஷர்களுக்கும் கட்டளைகொடுத்து முடித்தபின்பு, அவர்களுடைய பட்டணங்களில் உபதேசிக்கவும் பிரசங்கிக்கவும் அவ்விடம் விட்டுப் போனார்."

**பிரசங்கம்:** Defeating Man's Ignorance

அறியாமல் உள்ள இனங்களுக்கு கர்த்தரை பற்றி கர்த்தரின் அற்புதங்களை, கர்த்தரின் வார்த்தைகள், கர்த்தரின் சொல்களை சொல்லி, இருளில் இருக்கிற ஜனங்களை வெளிச்சத்தினிடத்தில் கொண்டுவருவதற்கு தேவை பிரகாசம், தேவனின் அன்பு, இரக்கம், மனதுருக்கம், கருனை இவைகளை குறித்து சொல்லுவது சுருக்கமாக பார்த்தால் கர்த்தரைக் குறித்து சொல்வது பிரசங்கம். மக்கள் மனம் திரும்புவதற்காக சொல்லுவது பிரசங்கம்.

மத் 3:2 மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்.

யோனா 3:2 "நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி என்றார்."

அப்படியானால் மனம்திரும்ப சொல்லுவது பிரசங்கம்.

**உபதேசம்:** Defeatig Man's misunderstanding

மத் 5:2 "அப்பொழுது அவர் தமது வாயைத்திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது"

அப்படியானால் உபதேசம் என்பது புரியாமல் இருப்பவர்களுக்கு சொல்லப்படுவது, கிறிஸ்துவைப் போல மாறுவதற்கு சொல்லப்படுவது உபதேசம்.

இன்றைய சூழ்நிலையில் அநேக மாறுபாடான செய்திகளை நாம் கேட்கிறோம். ஒருவன் ஒரு காரியத்தை இதன்படி செய்யலாம், ஒருவர் செய்யக்கூடாது என்று சொல்லுவார்கள். இப்படி பட்டதான மாறுபாடான செய்திகளால் நாம் விழுந்து போகாதபடிக்கு கிறிஸ்துவைப் போல மாறுவதற்காக உபதேசம் சபைக்கு தேவை.

## 4. சீஷன்:

சீஷன் என்ற பெயருக்கு அர்த்தம் " Committed learner and Follower"

அதாவது கற்றுக் கொண்டு பிற்பற்றுபவன் என்று அர்த்தம்.

லூக்கா 6:40 "சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்."

எபேசியர் 5:1 "ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாக" நடந்து கொள்ளுங்கள்.

என்று எபேசு சபைக்கு பவுல் ஆலோசனை சொல்லுகிறார்.

தேவன் நம்மை கிறிஸ்தவனாக மாறுவதற்க்கு அழைக்கவில்லை. சீஷனாக மாறுவதர்காகவே அழைத்தார்.

மத்தேயு 28:19-20 "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,

நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.

1.தேவனுடைய விசுவாசம் நமக்கு வரவேண்டும்
2.எந்த சூழ்நிலையிலும் நாம் தேவனை துதிக்க வேண்டும்
3.உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டும்
4.சீஷனாக கிறிஸ்துவை பின்பற்ற வேண்டும்

இந்த நான்கு காரியங்களை சரியாக செய்துவிட்டு சத்தியத்தை அறியும் போது நாம் விடுதலை பெறுவது நிச்சயம்.

கர்த்தர் நம்மை ஆசிர்வதிப்பாராக, ஆமென்.

கர்த்தரின் பணியில்,
சகோ.ஆண்டனி

## வாலிபர் பகுதி

தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருங்கள். விழித்திருங்கள் ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். (1பேதுரு 5:8)

இன்றைய நாளிலும் வாலிபர்களை குறிப்பாக இளந்தலைமுறைகளை பொல்லாத பிசாசானவன் எப்படியாவது தன்னுடைய வலைக்குள் வீழ்த்தி அடிமைப்படுத்த துடித்து பொண்டிருக்கிறான்.

 வெளி 12:12-ல் வசனம் சொல்கிறது "பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன்"

மொபைல், சமுக வலைத்தளம், காதல், மதுபானம், போதை மருந்துகள் இன்னும் பல வழிகளில் பொல்லாத பிசாசானவன் இன்றைய தலைமுறைகளை வஞ்சித்து அவன் பக்கமாய் இழுக்கிறதை பார்க்கிறோம்.

"திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்." யோவான் 10:10.

ஆம் தேவனுடைய பிள்ளைகளே அவனுடைய வேலை நம்மை வஞ்சித்து நம்மையறியாமலே கொஞ்சம் கொஞ்சமாக அவனுடைய சதி திட்டத்திற்க்குள் கொண்டு சென்று நம்மை முற்றிலும் பாவத்தில் மூழ்கடிப்பதாகும்.

அந்த பாவம் பூரணமாகும் போது மரணத்தை பிறப்பிக்கும். ஆகையால் என் பிரியமான சகோதரரே தேவனுடைய பிள்ளைகளே மோசம் போகதாதிருங்கள். (யாக் 1:15,16)

அப். பவுல் ரோமபுரிக்கு எழுதும் போது சொல்கிறார் பாவத்தின் சம்பளம் மரணம் என்று. (ரோமர் 6:23) ஆகையால் மோசம் போகாதிருங்கள ஆதாம் - ஏவாளை குறித்து ஆதி 3:1-24 வாசனங்களை தியானிக்கும் போது சாத்தான் அவர்களை எவ்வாறு வஞ்சித்தான் என்றும் அதனால் மனுக்குலம் இன்று வரை அனுபவிக்கும் சாபக்கட்டுகளை குறித்தும் இங்கே காணலாம்.

ஆதி 3:1 தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது.

பாருங்கள் சர்ப்பமானது இந்த சாத்தான் மகா தந்திரவாதியாயிருந்தான். அவன் மெதுவாக ஏவாளின் தனிமையை பயன்படுத்தி பேச்சு கொடுப்பதை பார்க்கிறோம்.

ஆம் தேவனுடைய பிள்னைகளே நம்முடைய தனிமையில் தான் சத்ருவாகிய சாத்தான் நமக்குள்ளாய் வந்து இதை செய் அது தவறில்லை என்று நயவஞ்சகமாக வார்த்தைகளை கொண்டு நம்மை நம்பும்படி செய்வான். இரண்டாவதாக பார்க்கும் போது மதுமையான வார்த்தைகளை கொண்டு நம்முடைய இருதயம் அதில் லயிக்கபடி செய்வான். (ஆதி 3:4-5)

1 கொரி 15:33-ல் அப். பவுல் சொல்லுகிறார் "மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்." என்று.
ஏவாள் சாத்தானிடம் பேச்சு கொடுத்தனிமித்தம் அவளை சர்ப்பம் தேவனை விடடு பிரிப்பதை பார்க்கிறோம்.

(தெடர்ச்சி 14-ஆம் பக்கத்தில் . . .)

# ..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்..

... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி.ரெஜினா ராமாமூர்த்தி
செல்வன்.ஏனோக் ஜோன் மார்க் அந்தோணி
செல்வன்.ஜோஸப் பிரின்ஸ் பால்ஜெகநாதன்
செல்வி.கீதா மகேஷ்ராஜ்
செல்வன்.டெலின் ஜெர்வின் பிராங்கின்
சகோதரி.பெல்வியா ஜெரின்
செல்வி. அஃபியா ஆரோக்கியதாஸ்
சகோதரி.ஸ்நேகா எபிநேசர்
சகோதரி.அஸ்வினி தினேஷ்
செல்வன்.கிதியோன் ஞானசேகர்
சகோ.ஆல்வின் ஜீலியஸ் தம்புகுமார்
செல்வி.ஜீயோனா ஷேரன் செல்வசிங்
சகோதரி.ஏன்ஜலீனா மணிராஜ்
செல்வன்.ஸப்பரின் தீமோதி சிவகுமார்
சகோதரி. பவானி ஆரோக்கிராஜ்
செல்வன். ஜான் லிவீஸ் ஜான் கெட்சன்
செல்வி. வென்பா ஜாமிஸ் ரவி ஜான்பீட்டர்
சகோ.தாமஸ்
செல்வன்.மோனித் ராஜ் வெங்கடேஷ்
சகோ.தாஸ்

சகோதரி.ஜெபராணி தர்மர்
சகோ.சதீஸ் குமார் எத்திராஜ்
செல்வன்.மெல்வீன் சாம் சாமுவேல் தாசையா
செல்வன்.கிளாட்வீன் சாமுவேல் எட்வீன்
சகோதரி.தேவ சொருபி கமலதாசன்
செல்வி.ஹாணி ஹார்ஸிதா வெங்கடேஷ்
சகோதரி.ரோஸ்லின் மேரி பால்ராஜ்
சகோ.ஸ்டாலின்
சகோ.சாந்தியா கட்டீஸ்
சகோ.வின்செண்ட் ஸ்வீட்
செல்வி.லீனா வில்கின்ஸ்
செல்வன். ஜேடன் டினோ பிராங்ளின்
செல்வன். ஜோகன் டினோ பிராங்ளின்
சகோதரி.சாந்தி ஜெயசேகர்
சகோதரி.ஹெப்ஸிபா பாமா சாம் ஆனந்த்
சகோ.அசோக் குமார்
செல்வன். சைமன் ஜெய்குமார்
சகோ.ஸ்டீபஃன் ஜெயகுமார்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி .22:18)

திருமதி & திரு. பக்தராஜ்
திருமதி & திரு.அசோக்குமார்
திருமதி & திரு.ஜோன்செல்வசிங்
திருமதி & திரு.சதீஸ் குமார்

திருமதி & திரு.ஜெஸ்டின்
திருமதி & திரு.வர்கீஸ்
திருமதி & திரு. ரிச்சர்ட்சன் டேனியல்

# 2022 ஜுலை மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/07/2022 | சகோ.ஏசுரெத்தினம் | சகோ.ஃபிராங்கிலின் |
| 10/07/2022 | உபவாச ஜெபம் (பாஹிலில் உள்ள ஜெப வீடு) | |
| 17/07/2022 | சகோ.காட்டீஸ் | சகோ.ஜெயசேகர் |
| 24/07/2022 | சகோ.ஜெகநாதன் | சகோ.ஆரோக்கிய ராஜ் |
| 31/07/2022 | சகோ.ஜான் கெட்சன் | சகோ.அருண் இம்மானுவேல் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 3:00 முதல் 5:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/07/2022 | தந்தயர் தின ஆராதனை | |
| 08/07/2022 | சகோ.ஃபிராங்கிலின் | சகோ.கிறிஸ்டோபர் .M |
| 15/07/2022 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 22/07/2022 | சகோ.ஆசீர்வாதம் | சகோ.சுகுமார் |
| 29/07/2022 | சகோ.பிரசாத் | சகோ.எபிநேசர் |

**14/07/2022 அன்று முழு இரவு ஜெபம்**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

**29/07/2022 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– மாலை 5:30 முதல் 7:30 மணி வரை
(வேத வினா பகுதி–எசேக்கியேல்)

**30/07/2022 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– மாலை 6:30 முதல் 8:00 மணி வரை
(வேத வினா பகுதி–தானியேல்)

# 2022 ஜுலை மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1.எப்படி கர்த்தரை தொழுது கொள்ள வேண்டும்?

2.யாருடைய நாவின் கீழ் அக்கிரமம் இருக்கிறது?

3.அநாதி காலமாய் இருப்பவை எவை?

4.உமது நீதியை பாரட்டியருளும் – யார் மேல்?

5.கனம் பொருந்திய மனுஷன் யாருக்கு ஒப்பாக இருக்கிறான்?

6.யாரை குறித்து நாம் எரிச்சலடைய கூடாது?

7.யார், யார் வீம்பு பேசுகிறார்கள்?

8.விரோதமாக வருபவர்களுக்கு பயப்படமாட்டேன் என்று யாருக்கு தப்பி ஓடும்போது பாடுகிறார்?

9.தாவீதின் கண்கள் ஏன் குழியாயிற்று?

10.வீடு பிரதிஷ்டையின் போது பாடப்படுகிற சங்கீதம் எது?

11.பூமியில் பாக்கியவானாய் இருப்பவர் யார்?

12.எது தேவனுக்கேற்கும் பலிகள்?

13.இது என்னை பெரியவனாக்கும், எது?

14.யாருடைய உதடுகள் கட்டப்பட்டு போவதாக?

15.யார் உணர்வடைய வேண்டும்?

**விடைகளை வருகின்ற 20-07-2022க்குள் (WhatsApp #65040638) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் சங்கீதம் 2-51 ஆகிய அதிகாரங்களில் பதிலை கண்டுபிடிக்கவும்.**

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## 2022 –ஜுன் மாத வேத வினாவுக்கு விடை

1.பத்து தரம் (யோபு 19:3)
2.வறட்சியும் உஷ்னமும் (யோபு 24:19)
3.யோபுவிலும் இளவயதான பெலனற்றவர்கள் (யோபு 30:5)
4.யோபுவின் மீறுதல் (யோபு 14:17)
5.எவன் தன் சிநேகிதருக்குக் கேடாகத் துரோகம் பேசுகிறானோ அவன் பிள்ளைகளின் கண்கள் (யோபு 17:15)
6.கர்த்தருடைய கரம் (யோபு 26:13)
7.பரகெயேலின் குமாரன் எலிகூ (யோபு 32:6,7)
8.தீக்குருவிகள் (யோபு 39:13,16)
9.மூர்க்கம் (யோபு 19:23)
10.கர்த்தர் யோபுவுக்கு (யோபு 19:8)
11. கர்த்தரை (யோபு 23:3)
12.யோபு 31:9, 24–25
13.யோபு (யோபு 16:22)
14.நியாயம் (யோபு 29:14)
15. நாகமாத்தியனான சோப்பார் (யோபு 20:3)

## 2022– ஜுன் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis.ஜீனா சதிஷ்குமார்
Sis. சுகந்தி தம்பு குமார்
Sis.நித்யா ஜோன்ஸ்
Sis.வனித்தா
Sis.பியூலா ஜெகன்நாதன்
Sis.ஜெஸ்லெட்
Sis.விஜயா ஆண்டனி
Sis.அனிதா ஆரோக்கியதாஸ்
Sis.மெர்ஷிலின்தயா ஏசுரெத்தினம்
Bro.பால்ராஜ்
Bro.கனேஷ் குமார்

சங் 1:1-2 –ல் செல்லப்பட்டது போல "இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" அவருடைய வார்த்தை உங்கள் இருதயத்தில் நிறைந்திருக்கட்டும். சாத்தானுக்கு இடங்கொடாதிருங்கள்.

தாவீது சங் 26:3-5-ல் சொல்கிறார் " . . . உம்முடைய சத்தியத்தில் நான் நடக்கிறேன்" அதனால் தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களுக்கு தன்னை விலக்கி பாதுகாக்கிறதை பார்க்கிறோம்.

தேவனுக்கு பிரியமானவர்களே கர்த்தருடைய சத்தியத்திலே நடந்து கொள்ளுங்கள் ஏனென்று சொன்னால் வசனம் சொல்கிறது சங் 119:142 "அவருடைய வேதம் சத்தியம் என்று"

மூன்றாவதாக பார்க்கும் போது தேவன் புசிக்ககூடாது என்று சொன்ன பழத்தை இச்சித்து அதை புசித்தாள் என்று. அது மாத்திரமல்ல அவள் தன்னுடைய புருஷனாகிய ஆதாமுக்கும் அதை கொடுத்தாள் என்று வசனம் இங்கே (ஆதி 3:6) –ல் சொல்லுகிறதை பார்க்கிறோம்.

யாக் 1:16-ல் , வசனம் சொல்லுகிறது மோசம் போகதிருங்கள் என்று. இவர்கள் செய்த இந்த பாவத்தினிமித்தம் ஏதேன் தோட்டத்தில் இருந்து தேவனுடைய சமுகத்திலிருந்து துரத்தப்பட்டார்கள் என்று பார்க்கிநோம் (ஆதி 3:24).

"தேவனுக்குப் பிரியமுமாளவர்களே உங்கள் அவயங்களை தேவனுக்கு உகந்த ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள்" (ரோமர் 12:1)

ஆத்துமாவுக்கு விரோதமாய் போர் செய்கிற மாம்ச இச்சைகளை களைந்து போடுங்கள் (1பேதுரு 2:11).

கடைசி நாட்களில் வஞ்சிக்கபடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (லூக் 21:8)

(ஆதி 3:13) –ல் " ஏவாள் சொல்கிறாள் பிசாசு என்னை வஞ்சித்தது" என்று ஆம் தேவனுடைய பிள்ளைகளே பிசாசு வஞ்சிக்கிறவன். எவ்வகையிலும் அவனுக்கு இடங்கொடமல் அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடி போவான் என்று ( யாக் 4:7 , எபே 4:27).

பாருங்கள் பிசாசு ஏவளை பிடித்தது மாத்திரமல்ல அவள் மூலமாய் ஆதாமையும் மோசம் போக்கினது என்று பார்க்கிறோம். நாம் பிசாசுக்கு இடங்கொடுத்தோமானால் (தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களுக்கு) அவன் நம்மை மாத்திரமல்ல நம்மை சுற்றியிருக்கிற ஒவ்வொருவரையும் மோசம் போக்கி விடுகிறான்.

"விசுவாசத்திலே உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்". அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடி போவான் (1 பேதுரு 5:9).

## முடிவுரை:

இயேசு கிறிஸ்துவானவர் எப்படி தம் வார்த்தையினால் பிசாசை ஜெயித்தாரோ (மத் 4:3-11)

அதே போல சத்திய வசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்து அவனுடைய சதி திட்டங்களை முறியடிப்போம். தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்து கொள்ளுவோம் (எபே 6:11).

(1 நாளா 21:1 ) இஸ்ரவேல் ஜனங்களை தொகையிடும்படி தாவீதை சாத்தான் ஏவி விட்டது என்று பார்க்கிறோம்.

(அப் 5:1-11) அனனியா-சப்பிராளை சாத்தான் வஞ்சித்தது இதனால் அவர்கள் ஒருமனப்பட்டு தேவனுக்கு விரோதமாய் துணிகரமாய் பாவஞ்செய்யும்படி ஏவியது.

(லூக் 22:3) தேவனோடு உடனிருந்து ஊழியம் செய்த யூதாசுக்குள்ளும் சாத்தான் நுழைந்தான் என்றும் பார்க்கிறோம்.

(யோபு 2:3,7) நீதிமானாகிய யோபுவை சாத்தான் சோதித்தான் என்று பார்க்கிறோம்.

ஆம் தேவனுடைய பிள்ளைகளே நாம் எம்மாத்திரம் இதோ, நிற்கிறேன் என்று சொல்லுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கடவன் (1 கொரி 10:12).

அனுதினமும் தேவகிருபையில் பெலப்படுவோம், தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருந்து சாத்தானின் போசம் போக்கும் சதி திட்டங்களுக்கு விழித்திருந்து அவனுக்கு எதிர்த்து நிற்ப்போம். தேவ கிருபை உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

வாலிபம் இயேசுக்கே

## சகோதரிகள் பகுதி

## சாத்தானின் முதல் எதிரி பெண்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

தேவனாகிய கர்த்தர், பெண்களாகிய நம்மை மிகவும் நேசித்து எப்படி மேன்மையாய், உயர்த்தி, உன்னதமான பாத்திரமாய் வைத்திருக்கிறார் என்று சற்று பார்க்கலாம்.

ஆதியாகமம் 2:18 பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்.

மனுஷனுக்கு துணையாக தேவன் நம்மை உருவாக்கினார். கர்த்தர் சகல வித மிருகங்களையும், ஆகாயத்தின் சகல வித பறவைகளையும்

மண்ணினாலே உருவாக்கினார். ஆனால் பெண்களாகிய நம்மை எப்படி உருவாக்கினார்.

ஆதி 2:21,22 அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்.
இந்த உலகத்தில் பெண்கள் தேவன் உருவாக்கியதே அற்புதமான படைப்பு ஆகையால் நாம் பெலவீனம் ஆனவர்கள் அல்ல என்று நாம் எப்பொழுதும் விசுவாசிக்க வேண்டும்.

இயற்க்கைக்கு பிறகு, பெண்கள் தான் அழகானவர்கள் என்று சொல்லுவார்கள். ஆங்கிலத்தில் Beauty or Beautiful என்ற வார்த்தை பெண்களுக்கு மட்டும் உரியது.

ஆண்கள் நாம் Smart, Handsome என்றுதான் சொல்லுவர்கள்.
சங்கீதம் 68:13 நீங்கள் அடுப்பினடியில் கிடந்தவர்களாயிருந்தாலும், வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச்சிறகுகள்போலவும், பசும்பொன் நிறமாகிய அதின் இறகுகளின் சாயலாகவும் இருப்பீர்கள்.

அடுப்பு ஊதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என்னும் பழஞ்சொல் நாம் எல்லாரும் கேட்டிருப்போம்.

பெண்களாகிய நாம் அடுப்பினடியில், கறை பிடித்து, அப்படியே கருகி, ஒன்றுக்கும் உதவாதவர்களாய் இல்லாமல், தேவன் நம்மை வெள்ளியால் அலங்கரிக்கபட்ட சிறகுகளும், பசும்பொன்னால் ஆன இறகுகளையும் கொண்டு (உயர பறக்க) நம்மை மேன்மையாக வைத்திருக்கிறார். இந்நாட்களில் பார்க்கும் போது பெண்கள் வேலையிலே, உயர்ந்த ஸ்தானத்திலே இருப்பதை பார்க்கிறோம். வீட்டில் உள்ள அனைவருக்கும் தேவைகள் ஏற்ற சமயத்தில் தயாரித்து தருகிறார். சந்ததி பலுகி பெருக வேண்டும் என்ற வாக்குதத்தம் பெண்ணின் வழிதான் நிறைவேறுகிறது. இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங்கொடுத்து, தன் வேலைக்காரிகளுக்குப் படியளக்கிறாள். ஒரு வயலை விசாரித்து அதை வாங்குகிறாள்; தன் கைகளின் சம்பாத்தியத்தினால் திராட்சத்தோட்டத்தை நாட்டுகிறாள்.தன்னைப் பெலத்தால் இடைக்கட்டிக்கொண்டு, தன் கைகளைப் பலப்படுத்துகிறாள்.தன் வியாபாரம் பிரயோஜனமுள்ளதென்று அறிந்திருக்கிறாள்; இரவிலே அவள் விளக்கு அணையாதிருக்கும்.தன் கைகளை இராட்டினத்தில் வைக்கிறாள்; அவள் விரல்கள் கதிரைப் பிடிக்கும்.சிறுமையானவர்களுக்குத் தன் கையைத் திறந்து, ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள்.தன் வீட்டார் அனைவருக்கும் இரட்டைப்புரை உடுப்பிருக்கிறதால், தன் வீட்டாரினிமித்தம் குளிருக்குப் பயப்படாள்.இரத்தினக் கம்பளங்களைத் தனக்கு உண்டுபண்ணுகிறாள்; மெல்லிய புடவையும் இரத்தாம்பரமும் அவள் உடுப்பு.தன் புருஷன் தேசத்து

மூப்பர்களோடே நியாயஸ்தலங்களில் உட்கார்ந்திருக்கையில் பேர்பெற்றவனாயிருக்கிறான். மெல்லிய புடவைகளை உண்டுபண்ணி விற்கிறாள்; கச்சைகளை வர்த்தகரிடத்தில் ஒப்புவிக்கிறாள்.அவள் உடை பலமும் அலங்காரமுமாயிருக்கிறது; வருங்காலத்தைப்பற்றியும் மகிழுகிறாள்.தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள்; தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது. அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள்.

இந்த பெலன் அனைத்தும் தேவன் பெண்களுக்கு தந்திருக்கிறார் நம்மில் எத்தனைப் பேர் ஆம் என்று சொல்ல முடியும், ஆமென்.

உலகத்திலே அப்பாவுக்கு பெண் பிள்ளைகள் மேல் பிரியம் அதிகம், அதை காட்டிலும் நம் பரமதகப்பன் எப்படி உன்னதமாக நம்மை நடத்துகிறார். சாம் செய்ய வேண்டிய ஒரே ஒரு காரியம் நீதி 31:30 கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரியே புகழப்படுவாள். நாம் தேவனுக்கு பிரியமாயிருப்பது, சாத்தானுக்கு பிடிக்காது, ஆகையால் தான் நம் குடும்பத்திலே சமாதானமின்மை, கஷ்டம், வியாதி, போராட்டங்கள், சோர்வுகளை கொண்டு வருகிறான். நாம் தேவனை பற்றிக் கொண்டு அனுதினமும், அவருடைய கட்டளைகளை, அவருடைய வாக்குத்தத்தங்களை கடைபிடித்து நடந்தால், மேற் கொள்ளும் பெலனை தேவன் நமக்கு தருவார், நமக்காய் தேவன் யுத்தம் செய்வார்.

வேதாகமத்திலே 66 ஆகமங்களில், 2 புத்தகம் பெண்கள் பெயரில் உள்ளது. 1. ரூத், 2.எஸ்தர். இந்த 2 புத்தகமும் சரித்தரம் என்று பேரிடப்பட்டுள்ளது.

1.ரூத் 1:17 நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள்.

இங்கே ரூத்தை பார்க்கும் போது அந்நியகுலத்து ஸ்த்ரீ, தன் கணவனை இழந்து, வெறுமையாய் தன் மாமியுடன் பெத்லகேமிற்கு சாப்பிட உணவும் இல்லாமல், வயல் வெளியில் அறுக்கிறவர்கள் பிறகே, அரிக்கட்டுகளிலிருந்து சிந்தின கோதுமையை பொறுக்கி, ஜீவித்தார்கள். ரூத்திற்கு, போவாஸ் கண்களிருந்து கர்த்தர் இரக்கம் கிடைக்கச் செய்தார். இவர்களுடைய சந்ததியில் கிறிஸ்து என்னப்படுகிற இயேசு பிறந்தார்.

2.எஸ்தர் 4:16 நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச்செய்து, மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம்பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம்பண்ணுவோம்; இவ்விதமாக சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச்சொன்னாள்.

எஸ்தர் ரூபவதியும் சௌந்தர்யமுடையவளுமாயிருந்தாள். தாயும் தகப்பனும் மரணமடைந்ததால், உறவுக்காரனாகிய மொர்தெகாய், எஸ்தரை தன் குமாரத்தியாக எடுத்து வளர்த்தான்.

ராஜ மேன்மையை இழந்த வஸ்தியாகிய ராஜஸ்தீரியின் ஸ்தானத்திற்காக, கன்னிமாடத்திற்கு சுத்திகரிப்புக்காக வரவழைக்கப் பட்டாள். சுத்திகறிப்பு முடிந்து, ராஜாவினிடத்தில் பிரவேசிக்க முறை வந்த போது, எஸ்தர் 2:17 ராஜா சகல ஸ்திரீகளைப்பார்க்கிலும் எஸ்தர்மேல் அன்புவைத்தான்; சகல கன்னிகைகளைப்பார்க்கிலும் அவளுக்கு அவன் சமுகத்தில் அதிக தயையும் பட்சமும் கிடைத்தது; ஆகையால் அவன் ராஜகிரீடத்தை அவள் சிரசின்மேல் வைத்து, அவளை வஸ்தியின் ஸ்தானத்திலே பட்டத்து ஸ்திரீயாக்கினான்.

ராஜஸ்தீரியாகிய எஸ்தர், ஏற்ற சமயம் காத்திருந்து எஸ்தர் 8:6 "என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக்கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும்? என்றாள்." ராஜாவின் கண்களிலே தலைகிடைத்து, எஸ்தர் கேட்டுக் கொண்ட எல்லா விண்ணப்பங்களையும், அதன் படி செய்ய, ராஜா கட்டளையிட்டார். அதினாலே யூதருக்கு சமாதானமும், பூரிம் என்னப்பட்ட இந்த நாட்கள், அவைகளின் சரியான காலங்களில் ஆசரிக்கப்படவும் சுதந்தரம் கிடைத்தது. இங்கே ரூத், அந்நிய குலத்து ஸத்ரீ, ஏழ்மையில் இருப்பவள் கைம்பென், தன்னை வளர்த்த மொர்தெகாயின் சொற்படி கேட்டு நடந்த்தினால் ராஜ மேன்மைக்கு உயர்த்தப்பட்டாள்.

இவர்கள் இருவருமே சுயநலமின்றி, குடும்பத்திற்க்காகவும், சமுகத்திற்காகவும் சாகவும் துணிந்தார்கள். மரணத்தை பெரியதாய் நினைக்காமல், தேவன் தேடி, விசுவாசித்தார்கள். தன்னையே அர்பணித்த கிறிஸ்துவின் சாயலைப் போல், வாழ்ந்தார்கள். வாழ்ந்து காட்டியவர்கள்தான் சரித்திரம் படைக்க முடியும்.

பெண்களாகிய நாம் தேவனுக்கு முன்பாக

1.அழகானவர்கள்

2.அன்பானவர்கள்

3.பாதுகாக்கப் பட வேண்டியவர்கள்.

தேவனுக்கு பிரியமானவைகள், பிசாசிற்கு எதிரி ஆகையால்

எப்படிப்பட்ட சூழ்நிலையிலும், நாம் வந்தடையதக்க கண்மலை, சாய்ந்து கொள்ள ஒரு கல், நாம் இளைப்பாறுகிற ஸ்தலம் எது என்ற சொன்னால், அது என் தேவனாகிய கர்த்தர் என்று விசுவாசிக்க வேண்டும், கொடியானது, திராட்சை செடியை சார்ந்து வாழும் போது, அதிக கனியைக் கொடுக்கும், தனித்திருந்தால் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். ஆகையால் நாமும் தேவனை சார்ந்து வாழ்வோம்.

தேவனுக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

கர்த்தரின் பணியில்,
சகோதரி.கீதா ஜெயகுமார்

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில



# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

சபை முதன்மை ஊழியர்

சகோ. ஜெயசேகர்

96646444

செயலாளர்

சகோ. இயேசு ரெத்தினம்

23924262 - 97545812

பொருளாளர்

சகோ. பால் ஜெகநாதன்

66889535 - 98852812

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . எப்சிபா ஸ்டீஃபன்

67792009 - 56640551

வாலிப ஐக்கிய தலைவர்

சகோ. பிரசாத் சுந்தரேசன்

60781168

Church Website Address - ahmaditamilchurch.com

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்

எதுவாக இருந்தாலும்

எங்களுக்கு தெரிவிக்கவும்

உங்களுக்காக ஜெபிக்க

ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only